| Class | 371.1007155 |
| --- | --- |
| No | N36 |

# IMPACT OF INFORMATION TECHNOLOGY(IT) TRAINING IN THE TEACHING PROCESS OF GRADE 10 TEACHERS (WITH SPECIAL REFERENCE OF THIRUKKOVIL EDUCATION ZONE)

OUSL Library
Donated by:
Dr. W. M. S. Wanasinghe

KATHIRVETPILLAI NIRUPAN

REG. NO:- 716933600

OPEN UNIVERSITY
74482

THIS DISSERTATION SUBMITTED IN PARTIAL FULFILLMENT OF THE REQUIREMENTS FOR THE DEGREE OF MASTER OF EDUCATION IN OPEN UNIVERSITY OF SRI LANKA

2020

# ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் அரச பாடசாலைகளில் கற்றல் கற்பித்தலில் முறையினை மேம்படுத்தும் நோக்கோடு தகவல் தொழினுட்பத்தினைப் பயன்படுத்திய கற்றல் கற்பித்தலுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதில் கற்பித்தலில், தகவல் தொழினுட்பத்தினை பிரயோகிப்பதற்காக ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட தகவல் தொழினுட்பப் பயிற்சியும் ஒன்றாகும். இப்பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களில் அதிகளவானோர் தமது கற்றல் கற்பித்தலில் தகவல் தொழினுட்பத்தினை பயன்படுத்தவில்லை என்ற கருத்தினை பல்வேறு ஆய்வுகளில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

திருக்கோவில் கல்வி வலயத்தில் உள்ள 44 பாடசாலைகளில் தகவல் தொழினுட்பப் பயிற்சியினை பூர்த்தி செய்த 213 ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். இக்கல்வி வலயத்தினைக் குடித்தொகையாகக் கொண்டு "10 ஆம் தரம் கற்பிக்கும் ஆசிரியர்கள் பெற்றுள்ள தகவல் தொழினுட்பப் பயிற்சியானது அவர்களது கற்பித்தலில் ஏற்படுத்தும் தாக்கம் (திருக்கோவில் கல்வி வலயப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)" எனும் தலைப்பில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தகவல் தொழினுட்பப் பயிற்சியில் பெற்ற விடயங்களை ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையில் பயன்படுத்துவது மிகக் குறைவாக உள்ளமைக்கான காரணங்களும், அதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதும் ஆய்வின் பிரதான நோக்கமாகும். இதனோடு நான்கு சிறப்பு நோக்கங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இவ் ஆய்வில் அளவீட்டு ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் திருக்கோவில் கல்வி வலயத்துக்குட்பட்ட 1AB, 1C, வகை II பாடசாலைகள் உள்ளடங்கலாக 12 பாடசாலைகள் எழுமாற்று, நோக்க மாதிரி முறை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன. இதில் 10 ஆம் தரத்தில் பிரதான பாடங்களைக் கற்பிக்கும் தகவல் தொழினுட்பப் பயிற்சி பெற்ற 60 ஆசிரியர்களும், தகவல் தொழினுட்பப் பயிற்சி பெறாத 60 ஆசிரியர்களும், இவர்கள் கற்பிக்கும் மாணவர்களில் 10% இற்கும் அண்மித்த தொகையினரும் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஆசிரியர்களிடம் இருந்து தரவுகளைப் பெறுவதற்காக வினாக்கொத்து, நேர்காணல் முறைகள் பயன்படுத்தப்பட்டன. மாணவர்களிடம் இருந்து தரவுகளைப் பெறுவதற்காக முற்சோதனை, பிற்சோதனை போன்றன பயன்படுத்தப்பட்டன. இத்தரவுகள் எளிய புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறைகளான சதவீதம், இடை, நியமவிலகல் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

பகுப்பாய்வில் இருந்து பெறப்பட்ட முடிவுகளில் பிரதான விடயங்களாக, ஒப்பீட்டளவில் தகவல் தொழினுட்பப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களில் அதிகமானோர் பாரம்பரியக் கற்பித்தலில் நடவடிக்கையில் சில வேலைகளை நிறைவேற்றுவதற்காக மாத்திரம் தகவல் தொழினுட்பத்தினைப் பயன்படுத்துகின்றனர். இதற்கான காரணங்களாக ஆசிரியர்களுக்குப் போதிய பயிற்சியின்மை, தகவல் தொழினுட்பம் பற்றிய போதிய விழிப்புணர்வின்மை, தகவல் தொழினுட்ப வளங்கள் பாடசாலைகளிடையே முறையாகப் பகிர்தளிக்கப்படாமை போன்றன அறியப்பட்டன. கற்பித்தல் செயற்பாட்டில் தகவல் தொழினுட்பப் பிரயோகத்தினை அதிகரிக்கச் செய்வதற்கான ஆலோசனைகளும் இவ் ஆய்வில் முன்வைக்கப்பட்டுள்ளன.

# Abstract

The Sri Lankan Government has provided the Facilities to utilize the Information Technology in Government schools to improve teaching and learning process between teachers and students. The information technology training courses had been provided for teachers to apply information technology in teaching methodology. Most of the teachers who completed the training were unable to use information technology in their teaching. It was found from various researches.

There are 213 teachers who have completed their IT training in 44 schools in Thirukkovil Educational Zone. The study was titled "Impact of Information Technology (IT) Training in teaching process of grade 10 teachers (With special reference of Thirukkovil Education Zone". The main objective of this study is to present the reasons and suggestions for not using information technology in teaching process. It had included four special objectives.

The study used a survey method. based on this, 12 schools were selected, such as 1AB, 1C, Type II schools in Thirukovil Education Zone. They were selected based on Random Sampling and Purposive sampling. Of these, 60 teachers who had IT Training and 60 teachers who didn't have IT training were selected, and 10% of the students, who were taught by above teachers as the sample, based on main subjects of Grade 10. The Questionnaire and Interview methods were used to collect data from teachers. Pre-Test and Post-Tests were used to obtain data from students. These data were analyzed by simple statistical analysis methods such as Percentage, Mean and Standard deviation.

The Analysis had found out that the majority of relatively trained IT teachers use information technology to perform in some ways of their traditional teaching. The reasons for this was found out as lack of adequate IT training for teachers, lack of awareness on information technology for students, Teachers and parents, providing information technology resources inequality within schools. The study had suggested the ways to increase the level of using information technology in the teaching and learning process.




ERSITY OF SRI
...RARY